## "சுனாமி நிவாரண பணிகளை வேகமாக செய்தார்"

# தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு அமெரிக்க தொண்டு நிறுவனம் பாராட்டு

சென்னை, டிச.15-

சுனாமி நிவாரணபணிகளை வேகமாக ஆற்றியது தமிழக அரசு என்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு அமெரிக்க தொண்டு நிறுவனமான பிரிட்ஸ் பாராட்டு தெரிவித்துள்ளது.

சென்னை-அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனம்தான் ஃபிரிட்ஸ். உலக அளவில் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளை ஆராய்ந்து தேவையான உதவிகளை அளிப்பதே இதன் பிரதான நோக்கம்.

சுனாமி தாக்கிய பகுதிகளில் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் எத்தகைய நடைமுறையைப் பின்பற்றி பாதிக்கப் பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகளை வழங்கின என்பது குறித்து ஃபிரிட்ஸ் மையம் விரிவாக ஆராய்ந்துள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிலைமை குறித்து ஃபிரிட்ஸ் மையம் இரண்டு கட்டமாக ஆய்வு நடத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு எத்தகைய நிவாரணப் பணிகள் இந்தியா, இலங்கை மற்றும் இந்தோனேசியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் இம்மையம் ஆய்வு நடத்தியுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் 26-ந் தேதி ஏற்பட்ட சுனாமி பேரழிவு ஏற்படுத்திய யதார்த்தங்கள் அதனால் நாம்படித்த பாடம் என்ன என்பது குறித்து பத்திரிக்கையாளர் சந்திப்பு நேற்று நடந்தது. இதில் பிரிட்ஸ் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் தலைவர் வின்பிரிட்ஸ் இயக்குனர் டாக்டர் அனிஸ்யா தாமஸ், விமலா ராமலிங்கம் (செஞ்சிலுவை சங்கம்) நிர்மலா ஸ்டீபன் ஆகியோர் நிருபர்களை சந்தித்தனர் அப்போது அவர்கள் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

பெரும்பாலான குடும்பங்கள் சுனாமி பேரழிவால் குடும்பத்தின் நிரந்தர வருமானத்தை இழந்துள்ளன. இந்தோனேசியாவில் பாதிக்கப்பட்ட 83% பேரில் 50% பேர் நிரந்தர வருமானத்தை இழந்துள்ளனர். இலங்கையில் 59% பேரும் இந்தியாவில் 47% பேரும் நிரந்தர வருமானத்தை இழந்துள்ளனர்.

• வாழ்வாதாரத்தை இழந்த போதிலும் 100 சதவீத இந்தோனேசிய மக்கள் தற்போது தாற்காலிக குடியிருப்புகள் மற்றும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் 92% பேரும் இலங்கையில் 78% பேரும் தற்காலிக குடியிருப்புகள் மற்றும் முகாம்களில் வசிக்கின்றனர்.

"பாதிக்கப்பட்ட மக்களில் தனி நபர்களிடையே பாதிப்பின் தாக்கம் அதிகமாக உள்ளது. நிலைமையின் தீவிரத்தை இவர்களிடம் பேசும்போது உணர முடிகிறது. இத்தகையோருக்கு நிவாரணம் மற்றும் உதவி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவரை இப்பணிகள் தொடர வேண்டும்", என்று ஃபிரிட்ஸ் மைய நிர்வாக இயக்குநர் டாக்டர் அனிஸ்யா தாமஸ் தெரிவித்துள்ளார். இந்த ஆய்வு நடவடிக்கையானது பேரழிவு நிகழ்வின்போது மேற்கொள்ள வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து திட்டமிடுவது மற்றும் உரியவருக்கு உதவிகள் சென்று சேர்வதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.



அமெரிக்க தன்னார்வ தொண்டு நிறுவன தலைவர் பிரிட்ஸ்



அமெரிக்க தன்னார்வ தொண்டு நிறுவன நிர்வாக இயக்குனர் அனிஸ்யா தாமஸ்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுனாமி ஏற்பட்ட 48 மணி நேரத்துக்கு உள்ளூர் மக்களே நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தோனேசியாவில் 91% தனி நபர்களே மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தியாவில் 72% தனி நபர்களும் இலங்கையில் 47% பேரும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அதே சமயம் உள்ளூர் மற்றும் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பணிகள் அடுத்துவரும் நாள்களில் மிக முக்கிய பங்கு வகித்துள்ளது.

"பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக வெளி நிறுவனங்களால் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை என்பது மிகவும் யதார்த்தமான உண்மை", என்று ஃபிரிட்ஸ் மைய இயக்குநர் லின் ஃபிரிட்ஸ் தெரிவித்துள்ளார். மேலும் உள்ளூர் மக்கள் மட்டுமே இத்தகைய பேரழிவின் போது உடனடி மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பது தற்போது தெரிய வந்துள்ளது. அதற்கேற்ப இதுபோன்ற சீரழிவுகளைக் கையாள்வதற்கு உள்ளூர் மக்களுக்குப் பயிற்சி அளிப்பதன் அவசியத்தையும் சுனாமி உணர்த்தியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

முதல்வர் ஜெயலலிதாவின் நிவாரண பணிகள் பாராட்டுக் குரியது என்றார்.

விமலா ராமலிங்கம் கூறுகையில்:-

சுனாமியின்போது தாராளமான உதவி பொருட்கள் அளிக்கப்பட்டன அவை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் செஞ்சிலுவை சங்கம் அயராது பாடுபட்டது. ஆனால் ஏனோ செஞ்சிலுவை சங்கத்தின் பெயரே வெளியில் வரவில்லை தற்போதும் சுனாமி போன்ற பேரழிவின் போது எப்படி ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்பதை பற்றி விவாதிக்க பிரிட்ஸ் சர்வேக்குள் நமக்கு உதவும் நாளை (இன்று) என்.ஜி.ஓக்கல் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் நடக்கிறது என்றார்.

நிர்மலா ஸ்டீபன் கூறுகையில், சுனாமியின் போது தமிழக அரசின் நிவாரணபணிகள் மிக வேகமாக இருந்தது. என்.ஜி.ஓ.அமைப்புகளும் தங்களால் என்ன என்ன பணிகள் செய்யமுடியமோ அத்துனை பணிகளையும் செய்தனர்.